# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2012/2013 (2015 September)

| | |
|---|---|
| **GYS 2213** பொருளாதாரப் புவியியல்<br>(Economic Geography) | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி- 1

01. அ. பொருளாதாரப் புவியியல் கொண்டிருக்கும் உப ஒழுங்கு நெறிகள் யாவை?

(08 புள்ளிகள்)

ஆ. பொருளாதாரப் புவியியலின் நவீன அணுகுமுறைகள் பற்றி பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(17 புள்ளிகள்)

02. அ. இயற்கை வளங்கள் எனும் பதத்தினை வரையறை செய்வதுடன் எங்கும் கிடைக்கும் இயற்கை வளம் என்பதிலிருந்து உள்ளூர் மயப்படுத்தப்பட்ட மூலவளங்கள் என்பதனை வேறுபடுத்துக.

(5 புள்ளிகள்)

ஆ. வளங்களை வகைப்படுத்தும் பின்வரும் வழிகளில் எவையேனும் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றை வகைப்படுத்தி விளக்குக.

1. முடிவடையும் தன்மையின் அடிப்படையில்
11. உரிமைத்தன்மையின் அடிப்படையில்
111. வளங்களின் விருத்தி நிலையின் அடிப்படையில்

(10 புள்ளிகள்)

இ. “நூற்றாண்டு ஒன்றினுக்கும் மேலாக பொருளியலாளர்களினால் பெரிதும் கருத்தில் கொள்ளப்படுகின்ற உற்பத்திக்கான பழமைக் காரணிகளாக மனித மூலவளமும், மனித வளமற்ற மூலவளங்களும் காணப்படுகின்றன”. உற்பத்தித் தொழிற்பாடுகளின் இன்றைய நிலமைகளை முதன்மைப்படுத்தி இக் கூற்றினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

03. அ. மிகைக் குடித்தொகை என்பதிலிருந்து உகந்த குடித்தொகை என்பதனை வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

ஆ. குறைக் குடித்தொகையின் இயல்புகளை எடுத்துக் கூறுவதுடன் சார்புரீதியான குறைக் குடித்தொகை முழுமைக் குறைக் குடித்தொகையிலிருந்து வேறுபடும் நிலையினை உதாரணங்கள் தந்து விளக்குக.

(05 புள்ளிகள்)

இ. மிகைக் குடித்தொகை நாடொன்றில் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குவதுடன் அவற்றின் விளைவுகளையும் அவற்றினை இழிவுபடுத்துவதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகளையும் நுணுகி ஆராய்க.

(15 புள்ளிகள்)

பகுதி-11

04. “பசுமைப்புரட்சி என்பது பாரம்பரிய விவசாய முறையினை நவீன விவசாய முறையாக மாற்றுவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளது”. இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்கி நாடொன்றின் பொருளாதாரக் கட்டமைப்பில் விவசாயத் துறையின் பங்களிப்பினையும் மதிப்பிடுக.

(25 புள்ளிகள்)

05. “இன்றைய உலகக் குடித்தொகை வளர்ச்சிப்போக்கும் உணவு வளங்கள் கிடைக்கப்பெறும் நிலையும் முரண்பட்ட சமநிலை ஒன்றினைத் தோற்றுவித்து வருகின்றன” எனும் கூற்றினை நீர் ஏற்றுக் கொள்வீரா? வளர்முக நாடுகளிலிருந்து உதாரணங்கள் தந்து இக்கூற்றினை நுணுகி பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினுக்கு விளக்கக் குறிப்பு தருக.

அ. நாடொன்றின் பொருளாதாரக் கட்டமைப்பில் கைத்தொழிற் துறையின் பங்களிப்பு.

ஆ. பொருளாதாரப் புவியிலின் கோட்பாட்டு ரீதியான நோக்கு

இ. கலப்பு பொருளாதார முறைமை

(12.5x2 = 25 புள்ளிகள்)